1181

Regd. No. M. 1630. JULY. 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷால் மஹறிபா என்னும்

ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2 } ருத்ரோற்காரி௵ ஆடி௴ 1௳ 1923௵ ஜூலை௴ 16௳ { இதழ் 4

'ol. II. No. 4.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	73
சீவன்முத்தர்களிலக்கணம்—மணிமுத்துநாயகம்	74
அடியாரிலக்கணம்—ஞானக்களஞ்சியம்	77
கணித சன்னியாசம்—வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்	81
சன்னியாசம்—ஞானக்களஞ்சியம்	84
ஆசிரியரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன்	86
சங்கீதம்—மணிமுத்துநாயகம்	90
முருகத் திருப்புகழ் —ஞானக்களஞ்சியம்	93
தாம்பூலத்தின் குணம்—க. ஞானபூபதி	94
தமிழ் வைத்திய சங்க 2-வது மகாநாடு கண்காட்சிகள்:— வி. சிவஞானயோகி, சென்னை	95

(இ)ப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். எனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அசனல் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒருமாசத்திற்கு ...	ரூபா	7—0—[illegible]
அரை பக்கத்திற்கு	,,	,,	4—0—[illegible]
கால் பக்கத்திற்கு	,,	,,	2—8—[illegible]

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்த தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போது முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு, பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனாமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர்.

ஸ்ரீமான்

சுயம்பிரகாசத் துணை.

ஸம்ஷூல் மஹறிபா என்னும்

ஞான சூரியன்.

இது ஒரு இனிய மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரி ௵ ஆடி ௴ 1௳. [இதழ் 4.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா ணிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளிமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இரு[illegible]னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யசுதுவா மாக்க நோக்கி
யைந்துபுல னைம்பூதங் கரண மாகி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
யிந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யெம்யாம்.

(தாயுமான வள்ளல்.)

ஞான சூரியன்

இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

சீவன்முத்தர்களிலக்கணம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னை நினைத்தால் இடுப்பில் உதைப்பேன்நான்
உன்னை நினைத்தால் உதை.

என்னும் பாசுரத்தைக் கூறிவிட்டு உடனே நிட்டையிலமர்ந்து விட்டனர் என்பதைக் கற்றவரும் மற்றவரும் அறிந்தவிஷயம் ஆதலால் சீவன்முததர்களுக்குக் காமஇச்சையானது ஓர்கால தில் அபூர்வமாய்த் தோன்றிடினும் இந்திர தனுவைப்போல் தோன்றி மறைந்துபோகுமேயன்றி நிலைபாக இராது.

கைவல்லிய நவநீதம்.

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போம் மனத்திற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். என்னும் முக்காலங்களின் பலனாகிய சென்றகாரியத்தையும் அப்போது நடைபெறுஞ் சுகாசுகங்களையும் இனிக் கிடைக்கப்போவதையுங் கருதாமல் விருப்பு வெறுப்பற்று நிராசையாக இருப்பவரும், அவ்வப்போது கிடைத்த உணவைக் காட்டாக்கினி தன்னுள் அகப்பட்ட

பொருள்களை யெல்லாம் தகித்துவிடுந் தன்மைபோல் இதுவேண்டும்! இதுவேண்டாம்! என்னுங் கருத்தின்றி விளங்குபவர்களே பிரமவித்து என்னும் சீவன்முத்தர்கள்.

கைவல்லிய நவநீதம்.

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையா யொன்றும் பாரார்
மன்றுநீ தென்னூர் சாட்சி நடுவான சீவன் முத்தர்

2. பிரமவரன் விபரம்.

அசம் சத்தியென்னும் ஐந்தாவது பூமியிலேறியவருக்குப் பிரமவரன் என்று பெயர். இவருக்குமுன் பூமியிலுதயமான ஞானோதயத்தால் மனோநாசமாகித் தூக்கத்தில் நிர்ச்சலனமாகிய சுழுத்தி அவத்தையைப்போல் பிரபஞ்சமானது விகாரமின்றிச் சுகமயமாகத் தோற்றுதலால், இப்பூமிக்குச் சுழுத்தி அவத்தையென்று பெயர் வந்தது. அட்டமாசித்திகளாலேயே இப்பூமியை அசம் சத்தியென்னப்படுகிறது. இப்பூமியில் நிற்கும் யோகியானவர் பிறர் எழுப்பாமல் தானே சமாதியிலிருந்து விழிக்கின்றனர். தன்பசியைத் தன்னாலேயே அறிந்து உச்சிப் பொழுதில் ஊர்க்குட்சென்று யாசித்து ஓர்வேளையேனும் புசிப்பவர்.

3. பிரமவரியான் விபரம்.

பதார்த்த பாவனையென்னும் ஆறாவது பூமியிலேறியவருக்குப் பிரமவரியான் என்று பெயர். இப்பூமி பரப்பிரமத்திற்கு அந்நியமாகிய அர்த்தங்களைப் பாவிக்கச் செய்யாது. இதில் நிற்கும் யோகியானவர் பிறர் எழுப்பினால் தான் சமாதியினின்றும் விழிப்பார். தன் பசியைப் பிறர் அறிந்து அவரிருக்குமிடந் தேடிவந்து வலிந்தூட்ட உண்பவர். இது காரணம் பற்றியே,

பட்டினத்தடிகள்.

"இருக்கு மிடந்தேடி என்பசிக்கு அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனேயென் றேகம்
இளைத்தாலும் போகேன் இனி. என்றும்

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை அண்ணலே." என்றும்

திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

4. பிரமவரிட்டன் விபரம்.

துரியம் என்னும் ஏழாவது பூமியிலேறியவருக்குப் பிரமவரிட்டன் என்று பெயர். இவர் சமாதியினின்று தானும் விழியார், பிறராலும் விழிப்பிக்கப்படார். சிறிய குழந்தையானது நித்திரையில் வலிய எழுப்பிச் சோறூட்டிய மாதாவை நோக்கி (தான் உண்டதை யுணராமல்) ஏன் எனக்கு இராத்திரிச் சோறு ஊட்டவில்லை? யென்று விழித்தபின் கேட்கும் மழலைப் பிள்ளையைப்போல் தானுண்டதை யுணராமற் சொக்கியிருப்பவர்.

இந்த நான்கு வகைத்தான சீவன் முத்தர்களும், தண்ணீருடன் சம்பந்தப்பட்டிருந்தும் சம்பந்தப்படாத தாமரை யிலையைப்போல், பிரபஞ்ச வாழ்க்கையாளரோடு பிரபஞ்ச வாழ்வுடையவராக வாழ்ந்தாலும் வாழ்வர்கள். மூடரைப்போலவும் ஊமைகளைப்போலவும் குற்றேவல் புரியும் பணிவிடைக்காரர்களைப் போலவும் பாவனைகாட்டித் தனது மகத்துவத்தைப் பிறர் அறியாத வண்ணமும் அங்ஙனம் அறிந்தவர்கள் வந்து தன்னை இம்சிக்காத வண்ணமும் பாலரைப்போலவும் பித்தரைப்போலவும் பிதற்றித் திரிவதுடன் தன் மனமானது பகிர்முகத்திற் செல்லாதபடி அகமனத்துடன் பேசிப் புன்னகையுடன் சஞ்சரித்தாலும் சஞ்சரிப்பார்கள்.

சிவஞான வள்ளல்.

மூடனைப்போ லேயிருப்பன் முத்தனெனச் சொற்றால்
ஈடு பொருந்துமோ எங்கோவே—சீடாகேள்
துக்க விடயம் சுகவிடயம் துய்த்தாலும்
பொய்க்குதிரை யேறுவான் போல்

ஒருபெண் நீண்டகாலமாக மலடாயிருந்து பின்னர் அருமையாகப் பிறந்த குழந்தையானது, பிள்ளைகளுடன் விளையாடப் போயிருந்தபோது தவறிப்போய் வீட்டுக்கு வாராதிருந்தால், அதன் தாய் கண்டகண்ட விடங்களெல்லாந் தேடியலைந்து அழு

தும் கிடைக்காமல் எங்கேனுமிருந்து தெய்வகதியாய் வந்து சேர்ந்தால், அக்குழந்தையைக் கட்டியணைத்து அழுது முன்னர் அவனைப்பெறாத காலத்தையும் இப்போது அவனைப் பெற்றதை யும் தவறிப்போய் வந்து சேர்ந்ததையும் நினைந்து நினைந்து, தவறிப்போய்விடப் பார்த்தானே! யென்று புன்சிரிப்புக் கொள் வாள். அதுபோல் ஞானிகள், முன் அதிதீவிர பக்குவியா யிருந்தபோது நெடுநாளாகச் சற்குருவைத் தேடி யலைந்தும் கிடைக்கப்பெறாமல் தெய்வ எத்தனத்தால் முடவனுக்குக் கொம் புத்தேனும் தரித்திரவானுக்குப் புதையலும் வலியக் கிடைத் ததுபோல் சற்குரு மூர்த்தியானவர் எதிர்ப்பட்டுத் தத்துவ ஞானத்தை உபதேசிக்கப் பெற்றுத் திருவருட் பிரகாசத்தைக் கண்டபின் தான் சற்குரு கிடைக்குமுன் திருவருளைப் பெறாமல் நீண்டகாலம் பிறவியில் வீணாளாகக் கழிந்ததையும் இப்போது அக்காலங்களுள் ஓர் காலமாவது கண்டுங் கேட்டுமிராத திரு வருளைக் கண்டுகொண்டதையும் நினைந்து களித்து இந்தத் திரு வருளிருந்த வாறென்னே! யென்று ஆனந்த நிர்த்தனஞ்செய்து அத்திருவருளைத் தோத்திரம்பண்ணி ஆனந்தக்கண்ணீர் விட்டு இத்தன்மையான திருவருளைப் பெறுவதற்கும் நமக்குப் பிரா ரத்துவம் இருந்ததே! யென்று ஆனந்தமேலீட்டால் அழுகை யுடன் சிரித்துக்கொண்டு மிருப்பார்கள். அன்றியும், பிரபஞ்சத் தவர்கள் ஞானிகளைப்பார்த்து உலகநடை தெரியாத பேயரென்று சிரித்துப் பரிகாசம் பண்ணிக்கொண்டிருக்க, ஞானிகள் அப்படிச் சிரித்துப் பரிகாசஞ் செய்பவரை ஞானநெறி இன்னதென்றறி யாத மும்மலப் பேயரென்று கருதித் தாமும் சிரிப்பார்கள். ஆதலால் ஞானிகள் நடைக்கு உலகர் நடை மாறுபாடாயும் உலகர் நடைக்கு ஞானிகள் நடை மாறுபாடாயும் இருக்கிறது.

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

அடியாரிலக்கணம்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொல்லிக் கொண்டிருக்கையில், சில புலையர் கடத்தில் எலும் பைக் கொணர்ந்து அதில் எறிந்துவிட்டுத் தாங்களும் முழுகி

பெழுந்தனர். இதற்குள் அவ்வேதியனும் மந்திரமுடித்து எழுந்திருக்க, இச்சண்டாளர் அவனைக் கட்டிக்கொண்டு, 'எங்கள் அப்பனே! வீட்டிற்குவா போவோம்' என்று வலிமை செய்தார்கள். இவன், 'நான் பிராமணன், உங்களவனல்லேன், என் மார்பிற் பூணூலைப் பாருங்கள்' என்று கூவினான். அவர்கள் விடாமல், 'உங்கள் அப்பன் இறந்தால் அவன் என்புகளைக் கங்கையாற்றில் எறியுங்கள். உடனே அவன் நல்ல ஜனனமெடுத்துக் கரையேறுவான் என்று நம்முடைய குருக்கள் சொன்னார். அப்படியே நீ பிராமண சென்மமெடுத்துக் கரையேறினாய். உன்னை விடமாட்டோம். நம்முடைய வீட்டிற்கு வந்து சேகரித்து வைத்த நல்ல உணவுகளைப் புசித்துப் பின்பு தனித்திரு' என்று நிர்ப்பந்தப்படுத்தினர். பார்ப்பான் குய்யோ! முறையோ! என்று கூவித் தன் தலையில் அடித்துக்கொண்டு அழுதான். அப்போது, கரையிற் போகாநின்றவர்களும் அதிகாரிகளும் வந்து விசாரித்து, அவனை விடுவித்து, இச்சண்டாளரை நோக்கி 'அடே! புத்தியீனர்களே! உங்கள் குருக்கள் சொன்னது மறு ஜனனத்திற்காம். கரையேறுவது என்பது பாவத்தினின்றும் நீங்குவதற்காம்' என்று சொல்லி அனுப்பிவிட்டனர்.

வேமன்ன பத்தியம்.

மலமூத்திர இரக்தாதி மாம்ஸயுக் தம்பைன
முட்டுகுண்ட நீள்ள முன்ச னேமி
பைமுரிகி போவுனு லோமுரிகி போதயா
விஸ்வ தாபிராம வினுர வேமா.

(இதன்பொருள்.) மலம், மூத்திரம், இரத்தம், மாமிசம் முதலானவைகளைச் சேர்ந்திருக்கிற தீட்டு ஒரு மிடா ஜலத்தினால் போகுமா? தேகத்தின்மேல் படர்ந்திருக்கும் அழுக்குகள் போகுமேயல்லாது உட்புறமாயிருக்கிற தீட்டுகள் ஒழியாது. ஆதலால் உள்சுத்தியாகிய சித்தசுத்தி செய்தாலன்றி, உள்ளழுக்குகளான தீட்டுகள் இந்த சரீரத்தை விட்டு ஒருபோதும் நீங்குகிறதில்லை. (என்றவாறு.)

முட்டுலோனே முட்டுலோனே புட்டிமுட்டண்டு னருரோசி
வட்டி தீர்ததமு நாடுவாரு கானி
முட்டுகுண்ட நீள்ள முன்சின சுத்தவுனே
விஸ்வதாபி ராம வினுர வேமா.

(இதன்பொருள்.) சுக்கில சுரோணிதம் என்னும் நாமதே யங்களுடைய இரத்தத்தால் நாம் சனித்து, அந்த இரத்தம் மாதாமாதம் வெளிப்படும்பொழுது அது துச்சமென்றும் தீட்டென்றும் தொடப்படாதென்றும் தீர்த்தமாடியபின் தொடலாம் என்றும் வீணுகப் பைத்தியம் பிடித்துச் சொல்லுகிறீர்களே! இந்த உபதேசத்தை எங்கக் குருவிடத்தில் கேட்டீர்கள் (என்றவாறு.)

ஆதலால் மேற்கூறிய பல கருத்துகளையும் ஆலோசித்து உணருமிடத்து தீட்டு என்பதே கிடையாது என்று தோன்றப் படினும், அது பகான்களுக்குக் கிடையாதேயன்றி மடியிற் பூனையைக் கட்டிக்கொண்டு வழிப்பூனைக்குச் சகுனம் பார்த்து தொட்டதற்கெல்லாம் சந்தேகமும் விபரீதமும் எண்ணக் கூடிய அந்தகாரமான பிரபஞ்சத்தவர்கட்கு, அஞ்ஞானம் நீங்காதிருப்ப தால் அவர்கட்கு எப்போதும் தீட்டுண்டு.

இப்பூவுலகத்தில் வசிக்கும் சர்வ சீவராசிகளும் உயிர்பெற்று வாழ்வதற்கு இன்றியமையாததாகிய ஆகாரம், வாயு முதலிய பொருள்களுள் தண்ணீரும் மிக்க அவசியம் என்பது அனைவரும் நன்கறிந்த விஷயமே. அத்தகைய தண்ணீருக்கு முக்கிய ஆதாரம் மழை. அந்த மழையானது,

வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புள மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே.

என்ற ஆன்றோர் வாக்கியப்படி ஒவ்வொரு மாதத்திலும் மும்மூன்று மழை பெய்துவந்தால் உலகத்திற்கு அளவிறந்த க்ஷேம சர முண்டாகும். அப்படிப் பெய்யாதொழிந்தால் க்ஷேமகால மின்றி க்ஷாமகால முண்டாகும். இதனாலேயே,

"மாரி யல்லது காரிய மில்லை" என்றும்

"வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்" என்றும்

நமது ஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந் திருக்கின்றனர்.

மழையானது சகல சீவகோடிகளுக்கும் உணவுப்பொருளை யுண்டாக்கி, அவ்வுயிர்கள் அருந்துவதற்கு அமிர்தம் போன்றி ருப்பதென்றும், காலந்தோறும் தவறாமல் மழைபெய்தால் பயிர் பச்சைகள் செழித்து வளர்ந்தோங்க அதனால் உலகம் நல்வாழ் வைப் பெற்று மகிழுமென்றும், ஆகாயமும் பரிசுத்தமாகுமென் றும், சத்திரம், ஆலயாதிகளில் நடந்துவரும் *முப்பத்திரண்டு தருமங்களும் நடைபெறாதென்றும், எவ்வகை மேம்பாடுடை யோர்க்கும் தண்ணீர் இல்லாமல் ஒருகாரியமும் நடவாதென்றும், விசாலமபொருந்திய சமுத்திரமும் வளங்குன்றி விடும் என்றும், சுருக்கிச் சொல்லுமிடத்தில் பூமியிலுள்ள சர்வ ஜீவகோடிகளும் உயிர்பெற்று வாழ்வது அரிதென்றும, மரம், மலைமுதலிய அச ரப் பொருள்களும் நிலை குன்றிவிடுமென்றும், இவ்வாறு சகல விஷயங்களுக்கும் மழையே காரணமென்றும் சொல்லப்படு கின்றது.

திருக்குறள்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

(*) முப்பத்திரண்டு அறங்களாவன:—1 - ஆதுலர்க்குச் சாலை, 2-ஓதுவார்க்குணவு, 3-அறுசமயத்தார்க்கு உண்டி, 4-பசுவுக்கு வாயுறை, 5-சிறைச்சோறு, 6-பிச்சை, 7-தின்பண்டம் நல்கல், 8-அறவைச்சோறு. 9-மகப்பெறுவித்தல், 10 - மகவு வளர்த்தல், 11-மகப்பால் வார்த்தல், 12-அறவைப்பிணம் எடுத்தல், 13-அறவைத்தூரியம் (வஸ்திரமளித் தல்,) 14-சுண்ணம் ஈதல், 15-நோய்க்கு மருந்து, 16 - வண்ணான், 17-நாவிதன், 18-கண்ணாடி, 19-காதோலை, 20-கண் மருந்து, 21-தலைக் கெண்ணெய், 22-பெண்போகம், 23-பிறர்துயர் காத்தல், 24-தண்ணீர் பந்தல், 25-மடம் கட்டுவித்தல், 26-தடம் (குளம்) வெட்டுவித்தல், 27-சோலை வளர்த்தல், 28-ஆவுறிஞ்சுதறி, 29 - விலங்கிற்கு உணவு, 30 - ஏறுவிடுத்தல், 31 - விலைகொடுத்து உயிர்காத்தல், 32 - கன்னிகா தானம்.

விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

திருமந்திரம்.

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.

இவ்விதமாக ஆன்றோர்களால் வியந்து சொல்லப்பெற்றதும் நமக்குப் பிரத்தியட்சமாய்த் தேவாமிர்தம்போன் றிருப்பது மாகிய மழையானது நல்லோர்களாகிய மகான்கள் எந்தத் தேசங்களில் வசிக்கின்றார்களோ! எந்தத்தேசம் பெரியோர்களை நன்கு மதிக்கிறதோ! அந்தத்தேசம் செழிப்பாக இருக்குமென்பதை நாம் சொல்லாமலே விளங்கும்.

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்.)

கணித சன்னியாசம்.

(18 - ம் பக்கத் தொடர்ச்சி.)

சன்னியாச விபரம்.

ஒரு இராசி பெறிலாவது அடைந்த கிரகங்களில் எத்தனை கிரகம் வலிதாக விருக்குமோ அத்தனைவித சன்னியாசங்களையும் அடைந்திருப்பவனும். அறம், பொருள், இன்பமென்னும் குடும்ப வாழ்வை வெறுத்தவனுமிருப்பான்.

சன்னியாச யோக முறை.

அதிக பலவந்தனான கிரகத்துக்கு பிரவற்சை யென்னும் சன்னியாசத்தை முதலில் அடைந்து, பின்பு அதற்கடுத்த கிரகத்தின் சன்னியாசமும் கிரமமாய் இந்தச் சன்னியாச யோகங்களை முன்பின்னாக அடைவான்.

சன்னியாசமில்லை.

எந்த இராசியிலாவது நான்கு, ஐந்து, ஆறு, ஏழு கோள்கள் கூடியிருக்க, அவர்களில் நட்பு, ஆக்ஷி, உச்சம் பெற்றிருந்தால்

அவர்களுக்குரிய சன்னியாசங் கிடைக்கும். பகைநீசம் அஸ்த மானங்களில் இருந்தால் சன்னியாசமின்றி கீர்த்தியுள்ளவனு யிருப்பான்.

சன்னியாசமும் மாறுதல்களும்.

கிரகங்கள் சேர்ந்திருப்பதில் செயமடைந்த கிரகத்தின் சன்னியாசத்தை யடைவான். ஜெனன காலத்தில் எந்த இராசியி லாவது அடைந்த கிரகத்தின் சன்னியாச யோகத்தை யுண்டாக் கும் கிரகம் நட்பாயிருக்கில், அவருக்குள்ள சன்னியாசத்தை யடைந்து அனுபவித்து பின்பு கிரகத்தனுகி பெண்டு பிள்ளைக ளுட னிருப்பான்.

செனனகாலத்தில் பல கிரகங்கள் ஒரு இராசியில் கூடிவரில் நட்பு பெற்றிருக்கிற கிரகத்துடன் கூடியிருக்கிற கிரகம் எத்தனை பேரானாலும் அவருக்குள் சன்னியாசங்களை யெல்லாம் அனு பவித்து பின்பு விட்டுவிடுவான்.

சன்னியாசிகள்.

சென்மகாலத்தில் பகை நீசம் ஆக்ஷியுச்சமில்லாது நட்பா கவே நாலு ஐந்து கிரகங்களிருக்க, அப்படி நட்போடிருக்கும் கிரகத்துக்கு உள்ள சன்னியாசத்தை மரணகாலம் வரையிலும் அனுபவித்திருப்பான்.

ரிஷபராசியில் சனி, செவ்வாய், புதன், குரு இவர்கள் கூடினாலும், கன்னியாராசியில் சுக்கிரன், சனி, சந்திரன், குரு, செவ்வாய் கூடினாலும், கும்பராசியில் புதன், செவ்வாய், சுக்கி ரன், குரு கூடினாலும் சன்னியாசி யோகம் ஏற்படும்.

சன்னியாச யோகம் கொடுக்கப்பட்ட கிரகம் அஸ்தங்கத மானாலும் அல்லது சூரியனைத் தவிர மற்றொருடன் கூடியாவது இருந்தாலும் அன்னிய கிரகம் இந்த கிரகத்தை நோக்கினாலும் சன்னியாச முண்டாகும். சூரியனுடனே சம்பந்தப்பட்டவர்கள் அஸ்தமானவர்கள் அதே அஸ்தங்கதமெனப்படும். ஆனால் பல முள்ள கிரகமான பிறவற்கை புருஷனுக்கு தள்ளப்படும். ஆனால்

ஏகராசியிலடைந்த சதுரர்திக் கிரகங்களில் பல யுக்த கிரகங்கள் சன்னியாசத்தைக் கொடுப்பார். அந்த பல யுக்த கிரகங்களில் எத்தனை கிரகம் அஸ்தங்கத மாகியிருப்பாரோ அத்தனைபேரும் தங்கள் தங்கள் சன்னியாசத்தைக் கொடுக்கார்.

சென்மகாலத்தில் சனியும் சென்மாதிபதியும் இந்த இருவர்களில் எவர் பலவந்தனாக விருப்பாரோ அவருடைய திசை புத்தி யந்திரங்களில் அந்தவிதமான சன்னியாசங்கள் ஏற்படும்.

திகம்பர (நிருவாண) சன்னியாசம்.

சென்மகாலத்தில் சந்திரன் இருந்த இராசிக்கு அதிபதி யாரோ அவரோ சென்மேசன். அவரை நோக்கின கிரகத்துக்குள்ள சன்னியாசம் ஏற்படும். அதாவது சென்மாதிபதியை சனி நோக்கப் பிறந்தவன் சகல கலைக்கியானங்களையும் நன்குணர்ந்து முற்றத்துறந்து நிருவாண சன்னியாசம் பெறுவான். அன்றியும், கும்பம், மகரம் என்னும் இரண்டு இராசியின் திரேகாணத்திலிருந்த சந்திரனை, குஜன், சனி இவர்களின் நவாங்கிசையிலிருந்த இதர கிரகங்கள் பார்க்காமல் சனியினால் பார்க்கப்பட்டால் சாதாரண நிருவாண சன்னியாசம் ஏற்படும்.

இராஜ சன்னியாசம்.

சென்மலக்கினம் சந்திரன், குரு இவர்கள் சனியால் பார்க்கப்பெற்று குரு 9-ல் இருந்தால் ஜனகரைப்போல் அரசுபுரிந்து ஞானத்தை யடைவர். சென்மலக்கினத்திற்கு 9-ல் சனியிருக்க அதை மற்றக் கிரகங்கள் நோக்கப்பிறந்தவர் இராஜாதி ராஜனாக இருந்து ஞானத்தைபடைவர். இவ்விருவரும் அனேக வேதாந்த நூலாசிரியராக விளங்குவர்.

மச்சமுனிவர்-800.

குடும்பத்தா னத்தினுக்கு வுடையோ னாட்சி
குருவான வியாழனுச்சம் பெற்று அஞ்சில்
விடும்பத்தில் சந்திரனு மிருந்தால் நன்று
விருட்சகத்தில் சேயிருக்க வாக்கில் புத்தி

அடும்புந்தி மேடத்தில் அரியில் ஆதித்
தவனிருக்கத் தனித்திருக்கத் துலாத்தில் வெள்ளி
இடும்பத்தில் இத்தனையு மிருக்கு மாகில்
என்ன சொல்வேன் இவன்ஞானி சோதியாரே. 233

வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்.

சன்னியாசம்.

(8 - ம் பக்கத் தொடர்ச்சி.)

சுகர் கேட்க, ஜனகவரோதயன், சுவாமி! தேவரீர் திருவாய் மலர்ந்தபடியே ஆச்சிரம தருமங்களை யனுசரித்துத் தேருமல் பிறவி ஞானம் பெற்றிருக்கப்பட்ட பெரியோர்களுமுண்டு. அவ்வாறு நேரிட்டிருந்தபோதிலும் வேதத்தில் விதித்த வண்ணம் ஆச்சிரம நான்கையுங் கைவிடாமல் அனுசரிப்பார்கள். ஞானம் வந்தவர்கள் நான்காச்சிரமத்தையுந் தழுவவேண்டியது யாது காரணமெனில், தாங்கள் படிபேறி விட்டோமென்றும் பற்றில்லாத ஞானவான்களென்றும் அலட்சியமாய் விட்டுவிட்டால், பெரியோர்களெல்லாம் இந்த ஆச்சிரமத்திற் பிரயோசனமில்லையென்று விட்டுவிட்டார்களே? பலனிருந்தால் விடுவார்களா? ஆகையால் நாம் ஏன் அந்த நான்காச்சிரமத்தையுங் கட்டிக்கொண்டழவேண்டும் என்று அக்கியானிகள் எண்ணி, தவ விரதங்களை அநுட்டிக்கமாட்டாத சோம்பேறிகளாகிச் சீக்கிரம் கெட்டுப்போவார்கள். சர்வேசுரன் சகல ஆன்மகோடிகளுங் கடைத்தேற வேண்டுமென்று மோட்ச வீட்டுக்கு ஏறிப்போகின்றபடி போல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைக்கு முறையே பிரமசாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சகலமுநாசன் என்பவற்றைச் சோபானக்கிரம்மாய் ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர். ஆகையால் பிறவிஞானம் பெற்றவர்களும் ஆச்சிரமங்களை அலட்சியஞ் செய்யாமல் அனுசரித்தே தீரவேணும். அங்ஙனம் அனுசரியாமல்விடும் பெரியோரால் உலகங் கெடும். அதனுற் பாவமிகும். ஞானவான்களுக்கு அக்கரையில்லாமற் போனாலும் உலகத்தாருக்காகத் தான் நடந்து காட்டி சிட்டா

சாரத் தன்மையாய் செய்விக்கவேண்டும். அதைக்கண்ட பூலோகத்தார் ஓ! பெரியோர்களெல்லாம் அனுட்டிக்கின்றார்களே? யென்று பேய்போற் பற்றிப் பிடிவாதத்தினாற் றேறுவார்கள். சகலமுந் தெரிந்த தாணுவே! உமக்கு நான் சொல்லவேண்டியதென்ன? வேதத்திற்குரிய தேவரீரே வேதவிதியை யிகழாமல் மூன்றாச்சிரமத்தை யனுசரித்து படிப்படியாயேறி நான்காவது ஆச்சிரம நன்னெறி நிலையிலிருப்பதே உத்தமமென்று சொன்னார். அதை சுகப்பிரமம் கேட்டு, அவ்வாச்சிரமங்களை ஓர் எட்டுணையும் அனுசரிக்காமல் உடனே பற்றறத்துறந்து சென்றனர், ஆகையால் இந்த ஆச்சிரமங்களைப் பிறவிஞானம் பெற்றவர்கள் அவசியம் அனுட்டிக்கத் தான் வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை.

தாயுமான வள்ளல்.

முத்தனைய மூரலும் பவளவா யின்சொலும்
முகத்திலகு பசுமஞ்ச ளும்
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற இருகும்ப
முலையின் மணி மாலைநால
வைத்தெமை மயக்கியிரு கண்வலையை வீசியே
மாயா விலாச மோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தை யர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத
பொன்னாட்டும் வந்த தென்றாற்
போராட்ட மல்லவோ பேரின்ப முத்தியிப்
பூமியி லிருந்து காண
எத்தனைவி காதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியா ததோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே.

ஞானக்களஞ்சியம்.

ஆசிரியரிலக்கணம்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருமந்திரம்.

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
மூாளும் பழங்குழி வீழ்வரா முன்பின்
குருடரு வீழ்வரா முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே.

நிறைந்த ஞானனந்தத்தில் அழுந்தியவர்கள், மதுவுண்ட வண்டைப்போல் பதைப்பற்றும், வெண்கலம் சப்திப்பதுபோல் பிதற்றிக் கொண்டிராமல் தங்கக் கலத்தைப்போல் நிசப்தமுடன் மவுனவிரதம் பூண்டிருப்பார்கள்.

ஆகையால் சகல ஆசைகளையும் அகத்தில் அடக்கிக் கொண்டு, புறத்திற் பற்றற்றவர்போல் நடிக்கும் ஆசாடபூதிகளாகிய வேடதாரிகள், பேதைச் சனங்களை மயக்கும் பொருட்டுப் படாடோபமாய்ச் சாமியார், மஸ்தான் என்று வாய்ப்பறை யடித்துக்கொண்டு, தண்டுகமண்டல தாரியாய் ஊர் ஊராய்த் திரிந்து எளியவர்கள் பரவமெல்லாம் கைக்கொள்பவர்களிடத்தில் தீட்சை பெறக் கூடாதென்பது இதன்மூலமாய் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றதல்லவா?

யோகஞான அப்பியாசமில்லாதவர்கள் தமக்கு வேண்டிய சில சாஸ்திரங்களை மனனம் பண்ணிக்கொள்வதால் எவ்விதச் சித்தியும் உண்டாகாது.

சடை முடித்தவன், தலைமொட்டை யடித்தவன், தண்டு கமண்டலந் தாங்கியவன், காஷாயவஸ்திரம் தரித்தவன், சரீரமெங்கும் விபூதியணிந்தவன், நாராயணவசனன், சிலசில வசனன், பாகிய (வெளிப்)பூசை அதாவது பூசைப்பெட்டகந் தாங்கியவன், துவாதச புண்டரம் உடையவன், உருத்திராக்கம், துளசி காஷ்டம் முதலியவற்றின் மாலைகளால் அலங்கரிக்கப் பெற்றவன் என்னும் இந்தக் கிரியையுடையவர்கள் அப்பியாசமில்லாத வாக்குச் சூரர்கள். இவர்கள் எப்படிச் சித்தி அடைவார்கள் என்று தத்தாத்திரயராலும்.

ஏகதண்ட திரிதண்டாதிகளாலும் சடை, பஸ்மம் (விபூதி) முதலியவற்றாலும், மொட்டையடித்துக் கொள்ளுதல், நிர்வாணியாய்த்திரிதல், கௌபீனதாரியாய்த் திரிதல், காஷாயம் தரித்தல், கந்தையுடுத்தல், உன் மத்தமாய்த் திரிதல் முதலியவற்றாலும் சித்தியுண்டாவதில்லை. அது நிரந்தர அப்பியாசத்தாலேயே உண்டாகுமென்று வாமதேவ மகேசுர சம்வாதமாகிய யோகாப்பியாசத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

துணங்குடி வள்ளல்.

வேஷந் தனைப்போட்டு மெய்மயக்கும் பொய்க்குருவைக்
காசாய் மதியேன்நான் கண்ணே! றகுமானே!

விஞ்ஞானசாரம்.

விடயமீதி லுபாதியும் மேவும் உயிர்மேல் கனியருளும்
அடையும் ஆசான் மேல்அன்பும் அந்தப்பிரம ஞானமுமே
தடையேயின்றி யிவைநான்கோர் தனுவா யுடையோர் தமைஞானம்
உடையோ ரென்பர் அயலாரை உரைப்பார்சோர ஞானியென்றே.

கஞ்சா, கள், சாராயம், அபின் முதலான லாகிரி வஸ்துக்களைப் புசிக்கக்கூடாது என்று குணங்குடியார், பத்திரகிரியார் முதலிய எல்லா மகான்களும் பிரத்திபட்சமாகச் சொல்லியிருக்கச் சில பரதேசிகள், அதற்கு மாறாக எங்களுக்கு மேல், கீழ் இல்லை; எல்லாம் ஒன்றுதான்; நாங்கள் எதை வேண்டுமென்றாலும் அருந்தலாம். ஆகையால், சீடா! கொஞ்சம் கஞ்சா இலை வாங்கிவா என்று சொல்ல, அதைச் சில பேதை மாணவர்கள் கேட்டு அங்ஙனம் வாங்கிவந்து கொடுக்க, அவர்கள் கஞ்சாப்புகை குடிக்கின்றனர். அத்தகைய மேல்கீழில்லாத பரதேசிகள், சில மகான்களைப்போல் வீரம், பூரமாகிய பாஷாணாதிகளையும் கற்கண்டைப் புசிப்பதுபோல் புசிக்கவேண்டும்; போதை முதலிய உபாதிகள் ஏற்படக்கூடாது. அங்ஙனமாயின் அவர்கள் எதையும் புசிக்கலாம்.

ஞானவெட்டி.

மண்டலத்தில் குருக்களென்று பேரும் பெற்று
மகத்தான தூளிதமு மணிந்து கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டு குல்லாச் சாத்திக்
கோகரணங் கேசகரணம் இரண்டுங் கற்றுத்

தெண்டிரையிற் பலவிதமாய்ப் பொய்கள் சொல்லிச்
சீடருக்கு முபதேசந் தெரியச் சொல்வார்
ஒன்றுமில்லை யவர்கள் கையில் வித்தையாச்சு
உள்ளவர்த்த மானமிதை யுரைசெய் வேனே.

உற்றுநின்ற சாத்திரத்தைப் பார்த்துப் பார்த்து
ஊணுகிடை யாமலுந்தான் புறட்டிப் பேசிப்
பத்தரென்றுங் குருக்களென்றும் வகுத்துச் சொல்வார்
பரகதியுந் தருவமென்று பணம் பறிப்பரர்
வித்துநின்ற விடங்காணார் வேருங் காணார்
விளங்குபரந் துலங்குகின்ற வீடுங் காணார்
எத்தவமுந் தருவமென்று உலகஞ் சுற்றி
எளியோர்கள் பாவமெல்லா மினிக்கொள் வாரே.

ஞானமதியுள்ளான்.

வாசியிலே தினம்வாழ்ந்தோ மென்றே சொல்லி
வையகத் தோரை மயக்கித் தியக்கியே
தேசியி லேறும் வகையறி யாமலே
சீடர்க் குபதேசம் செய்தவன் பேயன் (நானடா)

பாலிலே தண்ணீரைக் கலந்து அன்னப்பட்சியின் முன்னே வைத்தால், நீரைப் பிரித்துவிட்டுப் பாலை மாத்திரம் பருகிவிடும். அதுபோற் சற்சீடனிடத்திற் சிற்சில குற்றங்கள் காணப்பெறினும், அவைகளைத் தனது கருணையால் விலக்கிக் குணத்தைப் பாராட்டி, சற்குரு மூர்த்தியானவர் கிடைத்தற்கரிய தத்துவோபதேசம் செய்யவேண்டும்.

திருமந்திரம்.

கருத்த விரும்பே கனகம தானல்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தவப் போதே குருவருள் பெற்றான்
மறித்துப் பிறவியில் வந்தணு கானே.

பொன்னரிக்குங் கம்மியன் கம்மாளர்களிடத்தி லுள்ள பொன்கலந்த மண்ணை வாங்கித் தனக்குப் பிரயோசனமான பொன்னை மட்டிலும் அரித்துக்கொள்ளுவான். அதுபோல், சற்சீடனைவன், காலவேறுபாட்டால் அஞ்ஞானிகளுடன் கலந்து

வாழ்ந்தாலும், அவனை அந்தக் கூட்டத்திலிருந்து விலக்கி அருமையான சகச நிஷ்டையை ஞானசிரியர் உபதேசிக்கவேண்டும்.

விஷந்தீண்டியவனை மந்திர சக்தியாலும், ஔடதப் பிரயோகத்தாலும் தெளிவிப்பார்கள். அதுபோல் பிறவித் துன்பமென்னும் சுழலில் அகப்பட்ட நன்மாணவனை மெய்கண்ட தபோதனர்கள் சிந்தனையாலும் திருநோக்கத்தாலும் அஸ்த மஸ்தகசையோகத்தாலும் தனது திருவடிப் பரிசத்தினாலும் மெய்ஞ்ஞானியாக்கி விடுவார்.

ஒழிவிலொடுக்கம்.

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் மலமாயைக்
கருமத்தை யெல்லாங் கழற்றிச் —சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை யாக்காலே
போதை செய்து போக்கிவிடப் போம்.

திருவிளையாடற் புராணம்.

பார்த்த பார்வையால் இரும்புண்ட நீரெனப் பருகும்
தீர்த்தந் தன்னையுங் குருமொழி செய்ததும் தம்மைப்
போர்த்த பாசமும் தம்மையு மறந்து மெய்ப்போத
மூர்த்தியா யொன்றும் அறிந்திலர் வாதவூர் முனிவர்.

இந்தப் பூமியினிடத்தில் ஒருவனுடைய வியாதியை நிச்சயம்பண்ணி, இத்தனை நாளைக்குப் பிறகு தான் இவனுக்கு ஔடதங் கொடுக்கவேண்டுமென்று வைத்திடர்களால் நியமிக்கப் பெற்றாலும் ஒவ்வோர் அசாத்தியமான வியாதி யுடையவனுக்குப் பிணி சம்பவித்த அந்த நிமிடமே பூபதிமுதலிய அரிய ஔடதங்களைக் கொடுத்து அவனுயிரை உடனே திருப்ப முயல்வார்கள். அதுபோல் சாதன சதுட்டயமே ஓர்வடிவெடுத்து வந்தது போன்ற தீவிரதர பக்குவனுக்கு ஓராண்டேனுஞ் சோதனை புரிந்து, அதன்மேல் ஞானசிரியர் அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று சாத்திரங்கள் முறையிட்டிருப்பினும், ஒவ்வோர் அதிதீவிரதர பக்குவனுக்கு அந்தச்சணமே அல்லமதேவர் அக்கமாதேவிக்கு உபதேசம் செய்ததுபோல் உபதேசிக்கவேண்டும்.

பாதாதிகேசபரியந்தம் அக்கினி பற்றிக்கொண்டவனுக்கு மடுவில் விழுந்து மூழ்கினுலன்றி, கொஞ்ச சலத்திற் பிரவேசித்தால் அந்த அக்கினியின் வெப்பந்தணியாது. அதுபோல் பிரபஞ்ச மாயையென்னும் கொடிய வேங்கைக்குப் பயந்து சரணுகதியடைந்த சீடனுக்கு, அவனை விழுங்கி மேலிடப்பெற அகண்டாகார ஞானநெறியைச் சற்குருவானவர் உடனே அநுக்கிரகஞ் செய்யவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன்

சங்கீதம்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்று எண்ணுமல், சாந்தம், கருணை, தெய்வபக்தி, அடியார் மீது நம்பிக்கை, ஈகை, சத்தியம், கல்வி, கேள்வி முதலிய சர்வ சம்பத்துக்களையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பக்திமான்களாயும், வித்துவ சிரோன்மணிகளாயும் இருக்கிறார்கள் என்பதற்குப் பின்வரும் சரித்திரங்களே போதுமான சான்று பகர்ந்து நிற்கும்.

முன்னெருகாலத்தில் இராமநாதபுரத்தைச் சார்ந்த மருதூர் என்னும் பாடல்பெற்ற க்ஷேத்திரத்தில், மறவர் குலத்தில் தலைமலை கண்டதேவர் என்றொரு தமிழ் வித்துவான் இருந்தார். அவருக்கு நாலைந்து குழந்தைகள் இருந்தன. அப்போது நாடெங்கும் பஞ்சம் அதிகரித்திருந்ததால், அவரது தமிழைக் கேட்டுப் பரிசு கொடுப்பாரில்லை. அதனுல் புலவரும் மனைவியும் குழந்தைகளும் பசிப்பிணியால் மிகவருந்தினர்கள். அப்போது வித்துவானுடைய மனைவி, தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு தன் சகோதரர்கள் வீட்டுக்குச் சென்று, தன்னுடைய நிர்வாகத்தைச் சகோதரரிடம் சொல்லி முறையிட்டாள். பஞ்சமா பாதகங்களில் ஒன்றுன திருட்டுத்தொழிலையே ஜீவனமாகக் கருதிய அவர்கள் கேட்டு நகைத்து, 'உன் புருஷன் வெள்ளோலை கிறுக்குகிறவன். அவனுக்கு எப்படி க்ஷேமம் உண்டா

கும்? நாங்கள் எத்தனையோ தடவை திருடுவதற்குக் கூப்பிட்டும் வந்தானில்லை. அதற்கு நாங்கள் என்ன செய்கிறது? போனது போகட்டும். இனிமேலாவது எங்களுடன் உபபலமாக வந்தால் போதும். உங்களுடைய தரித்திரகாலம் விடிந்துபோகும் என்று புத்தி கூறிச் செலவுக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்து அனுப்பினார்கள். அதைக் கொண்டுவந்த வித்துவான்மனைவி, தன் நாயகனிடம் வந்து நீர் செய்கிறதொழில் ஒரு பைசாவுக்கும் பிரயோசனமில்லை. களவு என்கிற மாணிக்கம் கையில் இருக்கிறபோது, கேட்டு வாங்கிப் பிழைப்பது இழிச்சவாய்த்தனம் அல்லவா? ஆகையால் நீர் இனிமேலாவது என்புத்தியைக்கேட்டு என் சகோதரர்களுடன் களவுக்குப் போய்வந்தால், நமது தரித்திரம் இருந்தவிடம் தெரியாமல் ஓடிப்போகும். என் புத்தியைப் பெண் புத்தியென்று இகழவேண்டாம். அரசர்களுக்கு மந்திரி புத்தி சொல்வதுபோல் நாயகருக்கு நாயகி புத்திசொன்னால் நியாயமானதை ஒத்துக்கொள்ளவேண்டும். இதனாலேயே வேதநாயகம் பிள்ளை,

ஆபத்துவேளைக் கறிவுசொல்மந்திரி
அரும்பிணிக்கவளே சஞ்சீவி என்றனர்.

வாசிட்டநூலாசிரியரும் 'ஊகமுளதேற்சிறுவருரையுங்கொள்க' என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கதே.

"ஆற்றினுள் நின்று அரஹராப்போட்டாலும்
சோற்றுக்குள் இருக்கார் சொக்கநாதர்" என்றும்

நல்வழி.

மானங்குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம். என்றும்

'நாழி அரிசியை நாய் கொண்டுபோனால் ஞானமும் கல்வியும் பேய்கொண்டுபோகும், அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்' என்ற பழமொழிகளையுங் கூறிப்பலவிதமாகப்போதித்தாள்.

அதைக்கேட்ட வித்வான், ஹர! ஹர! சிவ! சிவ! இந்த பஞ்சமா பாதகத் தொழிலைப் புரிபவனுக்கு ஒருகாலத்திலாவது விமோசனம் உண்டா? இந்த வார்த்தைகளை இனி என்னிடம் சொல்லாதேயென்று காதில் கையை வைத்து மூடிக்கொண்டார். இப்படியிருக்கும்போது மைத்துனர்களும் வந்துவிட்டார்கள். அவர்களிடம் தன் நாயகன் சொல்வதைச்சொன்னாள். அவர்கள் கோபாவேசத்துடன், என் தங்கைக்கு சோறுபோட விதியற்ற பயலே! நீயும் ஒரு ஆண்பிள்ளையா? என்று பலவிதமாக நிந்தித்துப்பிறகு ஏன்காணும் ஓலைகளை கிறுக்கிக் கிறுக்கிக்கெட்டுப் போகிறீர்? நீர் எங்களுடனே ஆள் எண்ணிக்கைக்காக வாரும் நீர் திருடவேண்டாம், உமக்கும் சரியான பங்கு தருகிறோம் என்று சொல்லிக்கையை பிடித்து இழுத்துக்கொண்டுபோனார்கள். வித்துவான், என்னசெய்வார் பாவம்! 'முண்டனுக்கு இரண்டுபேர்' என்னும் பழமொழிபோல் நாலுபேர் சேர்ந்திழுக்கும்போது என்ன செய்ய முடியும். எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார், ஆ! கடவுளே! இது உனக்குச்சம்மதமா என்று புலம்பிக்கொண்டேபோனார்.

அன்றிரவு கள்வர்களெல்லாம் சேர்ந்து, எங்கே ஓடிப்போ போகின்றாரோ என்று வித்வானைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு மதுரைக்கு கிழக்கே 13-வது மைலில் மதுரையிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லும் பாதையில் இருக்கும் (Railway Station) அபாதஸ்தலமாகிய (திருப்புவனம்) திருப்பூவண நகரத்தில் அவதரித்தவளும்; குரல்—துத்தம்—கைக்கிளை—உழை—கிளி—விளரி—தாரம் என்னும் * ஏழிசைபைத்தந்தியினிடத்து எழச்செய்யும் யாழுக்கிசையப்பாடும் இன்னிசை நிரம்பியபாடலிலும், பரதநூலின் விதியால் நிரம்பிய ஆடலிலும், அரம்பையரை

* ஏழிசைகளும் பிறக்குமிடம்:— மிடற்றால்—குரல், நாவினால்—துத்தம், அண்ணத்தால்—கைக்கிளை, சிரத்தால்—உழை, நெற்றியால்=கிளி, நெஞ்சால்—விளரி, மூக்கால்—தாரம், இவற்றிற்கு ஓசையுவமை முறையே மயில்—இடபம்—ஆடு கொக்கு—குயில்—குதிரை—யானை என்பர்.

திகழ்ந்த பெண்வணப்பினர். கடவுளுக்கும் கடவுளது மெய்யடியார்களுக்கும் தொண்டு செய்வதிற்சிறந்து விளங்குபவளும்; அடியார்களைப்பற்பல புட்பங்களால் அர்ச்சித்து அவர்களுக்கு இனிய சுவைகள் அமைந்த கறிவகைகளோடு அமுது செய்வித்து எஞ்சியதாகிய சேடத்தை புசிப்பதே நியமமாக எண்ணைப் பட்டவளுமாகிய பொன்னனையாள் என்னும் தாசி ஒருத்தியிருந்தாள்.

(இன்னும் வரும்.)

மணிமுத்து நாயகம்.

முருகத்திருப்புகழ்.

ஹரிகாம்போஜி மேளம் கமாசு ராகம் ஆதி தாளம்.

	ஆரோஹணம்		அவரோஹணம்	
	ஸ கும அக கும ப சத கைநி ஸ்		ஸ் நி த ப ம க சரி ஸ	
1	த நி ஸ்	ஸ் ஸ் ஸ் ா ஸ்	ப த நி	நி நீ நி
	க ரு ணை	ய வ தா ர	வ டி வ	மு ட னே ழை
	ம ப த	த த தா த	க ம பா பா	
	க வ லை	மி கு தி ர	வ ரு வோ னே	
	த நி ஸ் நி	த நி ஸ் நி	த நி ஸ் நி	த ப த நி
	அ அ அ அ	அ அ அ அ	அ அ அ அ	அ அ அ அ
2	ஸ் ஸ் ஸ் ஸ்	ஸ் ஸ் ா ஸ்	ப த நி நி	நி நீ நி
	க ரு ணை	ய வ தா ர	வ டி வ	மு ட னே ழை
	ம ப த த	த தா த	க ம பா	பா ,,
	க வ லை	மி டி தி ர	வ ரு வோ னே	
	த நி ஸ் .	ஸ் நி த. ப த	நி நி த ப	ம ப த நி
	அ அ அ.	அ அ அ. அ அ	அ அ அ அ	அ அ அ அ
3	ஸ் ஸ் ஸ் ஸ்	ஸ் ஸ் ா ஸ்	ப த நி நி	நி நீ நி
	க ரு ணை	ய வ தா ர	வ டி வ	மு ட னே ழை
	ம ப ப த	த தா த	க ம பா	பா ,,
	க வ லை	மி டி தி ர	வ ரு வோ னே	

கமநித தபாப கம நித தபாப
கமல மலர்மீதில் அமரும் அயனுதி
கமபத நிதாப மக மப மா ,,
கடவுள் பணிஞான சிவயோகா

II பருவ மதிமானும் வதன வனமாது
பவன இதழூரல் அயல்வோனே
பசிய மயிலேறி மிகவு மகிழ்வோடு
பவனி வருமாறு முகநாதா

III குருவி னிருபாத பதும மதுவேத
குடிலை மனுவாக உபதேசா
குமரி கலியாணி விமலை அபிராமி
குரவர் புகழ்வாமி அருள்பாலா

IV இருக ணிடைமீதில் நடன மலைதநாடும்
எழில்கொள் அடியார்கள் பரிபாலா
இலகு புலிபூசை புரிய அருள்மேவும்
இனிய நகர்வாழும் முருகோனே.

ஞானக்களஞ்சியம்.

தாம்பூலத்தின் குணம்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிலேத்மாதிக்கும் நீங்கும் (இது பான் வயிற்றிலும் பசுவின் வயிற்றிலும் பிறப்பதாகும்).

பச்சை கற்பூரத்தினால் அட்டவித குன்மங்கள், கீல்களில் குத்தல், வாதநோய், சிழ்ப்பிரமேகம், சிலேத்ம கோபம் இவைகள் நீங்கும். இது ஈசன், வீமன், பூகாற்சிரேயன் என 3 விதமுண்டு.

கஸ்தூரிக்கு தலைநோய், கபமந்தமூலம், சன்னிசுரம் போம் வசியம், தேசஸ், சௌக்கியம், மாதர்க்கு நாதவிருத்தி, வண்மை இவை உண்டாகும். இது கரிகை, திலகை குளுந்தை, பிண்டிகை, நாயகை என 5 வகைப்படும்.

பன்னீரை ஔஷத அனுபானங்களில் கூட்டி உபயோகிப்ப தால் சுக சன்னி, வாதங்கள் விலகும். தனியே குடித்தால் ஆயாசங்களும் திரிதோஷங்களும் மனச்சங்கடமும் நீங்கும்.

தாம்பூலம் தின்பதில் காலையில் பாக்கு அதிகமாக சேர்த் தால் கிரமமாக மலஞ்சழியும், மத்தியானத்தில் சுண்ணும்பு சிறி து அதிகப்படுத்தினல் நல்ல பசிதீபனம் உண்டாகும், மாலையில் வெற்றிலை அதிகப்படுத்தினல் சரீர ஆரோக்கியமுண்டாகும்.

தாம்பூலம் தரிக்கும்போது முதலில் வெற்றிலையன்றி பாக் கை மாத்திரம் போட்டுக்கொண்டால் குற்றமுண்டாவதுடன் பந்துக்களின் உறவும் நீங்கும். முன்னதாக வெற்றிலையை தின் று பின்பு முறைப்படி பாக்கு முதலானவைகளை அருந்தவேண் டும். இவ்விதமாக நடக்கிறவர்களிடத்தில் லெட்சுமி வாசம் செய்வாள் என்பது கர்னபரம்பரை.

துவர்த்தல் சொக்குகல் மூர்ச்சைப்புழு உளுத்ததூள் பிசு பிசுப்பு முதலிய குணங்கள் இயற்கையாக பாக்குக்குள்ளிருப்ப தால் இதை முதலில் தின்பதனல் உடலுக்கு அபாயம் நேரிடு மென்பதுகருதி குற்றமுண்டாகுமென்றும் பந்துக்கள் கூட்டுறவு நீங்குமென்றும் கூறுகிறார்கள். வெற்றிலையை முதலில்மென்று

(இன்னும் வரும்)

க. ஞானபூபதி.

தமிழ் வைத்திய சங்க 2வது மகாநாடு கண்காட்சிகள்.

இரண்டாவது மகாநாடு கண்காட்சிகள் வருகிற ஆகஸ்டுமீ 18-19-20-21-வது தேதிகளில் சென்னையில் நடைபெறும். ரிட் டைர்ட் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜும், செக்ரெட்டரி ஆப்ஸ் டேட் கவுன்சில் பெம்பருமான திருவன் சர். சி. சங்கரநாயரவர் கள் நைட், சி. ஐ. ஈ. தலைமை வகிக்க அன்புடனிசைந்துளார்கள் உறுப்புமைச்சந்தா ரூ 3-0-0 வரவேற்புச் சங்கவுறுப்புமைச்சந்தா 10-0-0 வைத்தியர்களானல் ரூ 5-0-0 கண்காட்சிச் சந்தா ரூ 3.

வதிலி (டெலிகேட்)ச்சந்தா ரூ 2-0-0 காய்ச்சல் (சுரம்) இரும (க்ஷயம்) பற்றியவரை யுரைகளும் காட்சி விண்ணப்பங்களும் சித்த வைத்தியம் பற்றி அவரவர்கள் செய்யவிரும்பும் பிரசங்கங்களும் சந்தாத் தொகைகளும் வருகிற ஆகஸ்டுமீ 5உக்குள் அடியிற்கண்ட விலாசத்திற்கு சங்க அமைச்சருக்கு அனுப்பவேண்டும். சங்கத்துக்கு வெளியூரிலிருந்து வருகிற வுறுப்பினர்க்கு இடவசதியும் உணவு வசதியும் நாள் 1க்கு ரூ 1-0-0 விதம் பெற்றுக்கொண்டு சங்கத்தினின்று செய்து கொடுக்கப்படும். அவர்கள் ஆகஸ்டுமீ 7உக்குள் அமைச்சருக்கறிவிக்க வேண்டும். இம்மகா நாட்டில் 1-வது மகா நாட்டில் கொடுக்கப் பாக்கியாயிருக்கும் (மெடல்) பூக்களும் பட்டப் பட்டயங்களும் நன்மதிப்புத் தாள்களும் 2வதுமகாநாடு சம்மந்தமான பட்டம் முதலியவைகளும் கொடுக்கப்படும். காட்சிப் பொருள்கள் ஆகஸ்டுமீ 5உக்குள் அனுப்ப வேண்டும். நமது நாட்டு வைத்தியமாகிய சித்த வைத்தியத்தை முற்படுத்த இந்தச்சமயத்தை விட்டு விடாதீர்கள். நீங்கள் விண்ணப்ப மனுப்புவதோடு உங்கள் ஊரிலுள்ள வைத்தியர்களையும் அனுப்பத் தூண்டுகள்.

வி. சிவஞானயோகி
தமிழ் வைத்திய சங்க அமச்சர் 268, தங்காலைத்தெரு,
சென்னை.

நியாயாபிமானி.

பிரதி புதவாரந்தோறும் பிரஞ்சிந்தியாவில் வெளியாகும் ஓர் தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் வருஷ சந்தா	4—0—0
அயல் நாடுகளுக்கு	4—8—0

இதை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப்படித்துப்பயன் பெறுவார்களாக.

மானேஜர், நியாயாபிமானி,
காரைக்கால்.

மதிப்புரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இப்பெயர் புனைந்த ஒரு மாத சஞ்சிகையில் முதல் இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு வந்தது. இது டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள் அவர்களால் எழுதப் பெற்று மாதர்கள் திலகமாய் விளங்கும் சென்னை கவர்னர் பெருமாட்டி வில்லிங்டன் அம்மாள் அவர்களுடைய முகவுரையும் தீட்டப்பெற்றுள்ளது. இதில் குழந்தைகள் வளர்க்கும் விதமும் அவர்களை எவ்விதப் பயிற்சியுடன் நடத்தவேண்டுமென்கிற விதமும் இருமுதுதாவர்களாகிய பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய பற்பல அபூர்வ விஷயங்களும் மலிந்து பிரகாசிக்கின்றன. சிசுக்களின் விஷயத்தைப் பற்றி அநேக கல்விமான்களால் முன்னர் எழுதப் பெற்றிருப்பினும்,

> "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
> பெறாப்பேதை அறிவாளோ."

என்ற தாயுமான வள்ளல் கருத்திற் கிணங்க பூரண கல்வி பாண்டித்தியம் வாய்ந்த பெண்பாலாகிய மாதுஸ்ரீ. டாக்டர் அன்னுதாமஸ் அவர்கள் எழுதியிருப்பதானது சாலச்சிறப்புடைத்தாம் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

வருட சந்தா ரூ. 3-0-0.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும், திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

தமிழ் வைத்தியம்: — இதனுடைய முதல் தொகுதியின் முதல் சஞ்சிகை வரப்பெற்றோம். இது கோவிற்பட்டி தமிழ் வைத்திய சங்கத்தினின்று ஷெ சங்க அமைச்சர் சுவாமி விருதை. சிவஞான யோகிகள் அவர்களால் வெளியிடப்பெறுகிறது. இப்பத்திரிகையில் யோகிகளுக்கு வேண்டிய பிர்ம்ம கற்பமும் உலகர்க்கு வேண்டிய மருந்துகளும் அவ்வவற்றின் விபரங்களும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. இன்னும் வைத்தியர்கள் தத்தமக்குள்ள சந்தேக விபரீதங்களை நிவர்த்தித்துக்கொள்ள ஓர் ஆசானைப்போன்று பிரகாசிக்கின்றது. தமிழ் சித்த மருத்துவங்களும் சித்தர் மருத்துவ முறையின் கருத்துகளும் வடமொழி ஆயுர்வேத மருந்துகளும் விளக்க உரையுடன் சித்த நூற்களின் மேற்கோள் தாங்கி உலாவுவதானது தமிழ் நாட்டின் வைத்தியர்கட்கெதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

வருட சந்தா ரூ. 3-0-0.

தமிழ் வைத்திய சங்கம், கோவிற்பட்டி, என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

ஜனங்களே! ... மா

தூங்குக ...

வேதாந்த ... ன்

என்னும் நமது ... சூரியன்

உதயமான பின்ன ... வது

ஞாயமா ! —— ... ஞாயமா !!

அஞ்ஞான நித்திரை நீங்கி ! ... ழி ... டையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் ... கு ... ள் எண்ணியும்
(தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வி ... து ... விடமாட்டே
னென்குதே !! என ஓலமிடுபவரைப் ... ட்க்கை ... ல் அதிகமாக
மனதை நழைத்துக்கொண்டு ஐ ... மாட்டேனென்குதே?
என்று வருந்துகின்றனர். தூணே ... டு விடமாட்டேனென்
கிறேமா? தூண் நம்மைப் பிடி ... டேன் என்கிறதா?
என்றறிந்தவர் சிலரே. ஆதலின் சா ... ட்டிலிருப்பினும் கமல
நீர்போல் பற்றற்றிருக்க வேண்டு ... க, முதலானவைகளில்
வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நே ... சாத்தியமாயிருக்கிறது
அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோ ... வதுபோல் காலமெல்
லாம் கதை, காவியம், ப ... டுகளில் பொழுதைப்
போக்கிவிட்டு சாகப்போ ... !! ... பிதற்று
வதிற் பயனில்லை என்பன ... ர.

தேன்வண்டானது ... ன ... D ... வருபவரை
யுங் கொட்டுகிற தன்மை ... ச, ... நினைந்து,
நீங்கள் ஆத்மலாபம்பெற ... ளை ... டுக்காதிருங்கள்.
ஆத்மானுசந்தானம் பெறுவத ... ந்த நமது வேதாந்த
பாஸ்கரன் ஓர் சிறந்த வழி ... சிலர் எழுதிய கரடு
முரடான வசன நடைகளைப் ... னிய செந்தமிழ் வசன
நடையில் பன்னூற்களிலிரு ... அழகாயும், சமரச
மாயும் எழுதப்பெற்றிருப்பத ... கள், கிறிஸ்தவர்கள்
முதலிய எல்லாமதஸ்தர்களும் வா ... வாச ... இந்நூலை வாசிக்காத
வர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! த ... றிய இக்காலத்தில்
இத்தகைய நூல் வெளி வந்திலாவுவதான ... கு எதிர்பாராத ஓர்
பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டு

வேதாந்த பாஸ்கர ... —0—0

யோக ரகசியம் (ஒரு ... —0

விலாசம் :—மானேஜர், கருணி ... சூரி ... ஆபீஸ்,
... வ ... I. Ry.

... த்திரிகை ஸ்ரீ கருணையானந்த ஞான ... யபுரம்.
கருணாநிதி அச்சியந்திரசாலையில் பதிப்பி ... யிற்று.

ஸ்ரீ ஜயபுரம்—திருவாரூர். ... ஆதீனம் ... 0—0—0 ... 0—8—0
VIJAYAPURAM-T ... 32
... Suriyan Office, Vijayapuram
... அவர்களுக்கு.
Old College
Nungambakkam